செய்தி வெளியீடு எண்: 85 நாள் : 27.07. 2022

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களின் சென்னையில் நடைபெறும் 44வது ஃபைடே செஸ் ஒலிம்பியாட் போட்டியின் தொடக்க விழா வாழ்த்துச் செய்தி.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:

" சென்னையில் நடைபெறும் 44வது ஃபைடே செஸ் ஒலிம்பியாட் போட்டியில் பங்கேற்கும் அனைத்து சதுரங்க விளையாட்டு வீரர்களுக்கும் அவர்களது குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். **வசுதைவ குடும்பம்** (உலகம் ஒரு பெரிய குடும்பம்) என்ற உண்மையான உணர்வோடு நாம் போட்டியில் பங்கேற்று வென்று புதிய வரையறைகளை வகுப்போம்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், உலகின் பிற பகுதிகளிலிருந்தும் வந்திருக்கும் சதுரங்க விளையாட்டு வீரர்களான உங்களை வரவேற்று மகிழ்ந்து, வரலாற்று மற்றும் கலாச்சார தளங்களை பார்வையிடவும், தமிழ்நாட்டின் காலவரம்பற்ற, தெளிவான மற்றும் துடிப்பான ஆன்மீக செழுமையின் ஒரு பகுதியாக இருக்க அன்புடன் அழைக்கிறேன்.

உலகளாவிய பெருந்தொற்றின் அச்சுறுத்தல் இன்னும் முடிவடையவில்லை, அவை புதிய வகையில் எண்ணிறந்த அறைகூவல்களை முன்வைக்கின்றன. எனவே, தனிப்பட்ட மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும், வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை, உங்கள் அனைவரையும் இந்த மாபெரும் சதுரங்க திருவிழாவிற்கு அழைக்கிறேன், நீங்கள் அனைவரும் வசதியாகவும், பாதுகாப்பாகவும் தங்கிச்செல்லவும் அவற்றின் நினைவு நீங்காது நின்றிலங்கவும் வாழ்த்துகிறேன்."

---

ஆளுநர் மாளிகை, சென்னை - 22 ஒப்பம் /-

நாள் :27.07.2022 இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)